பேசியிருக்கிறார்கள். இது குறித்த அனைத்து விவரங்களையும் உடனடியாக அரசுக்குத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணிக்கப்பட்டு இருக்கிறார்கள். தகவல் வந்தவுடன் கட்டாயமாக அது குறித்த நிலை தெரிவிக்கப்படும்.

முற்பகல் 11-00

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சொந்த ஊரிலேயே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

(ஈ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகளை விரைந்து எடுத்துக்கொள்ளுதல்

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு பல்வேறு ஒத்திவைப்புத் தீர்மானங்களும், கவன ஈர்ப்புகளும் கடந்த ஒரு வார காலமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கொடுத்த நாளிலேயே எடுக்கப்படாவிட்டாலும்கூட, குறைந்தபட்சம் அடுத்த நாளிலாவது எடுத்துக்கொள்ள வேண்டும். சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளலாம். ஒவ்வொன்றையும் ஒத்திவைப்புத் தீர்மானமாகவே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நிச்சயமாக நாங்கள் கேட்கவில்லை. ஏனென்றால் தொகுதி மக்களுக்கு இங்கு இருக்கின்ற உறுப்பினர்கள் பதில் சொல்லியாக வேண்டும். ஆகவே, குறைந்தபட்சம் அன்று இல்லாவிட்டாலும், அடுத்த நாளாவது தங்களுக்குக் கிடைத்த தகவல்களை, அமைச்சர் அவர்கள் இந்த அவையின் முன்னாலே வைத்து, அந்த உறுப்பினரை, அந்தப் பிரச்சினையை எழுப்பவிட்டீர்களானால் போதுமானதாக இருக்கும். அமைச்சர் எப்போது தயாராகிறாரோ அப்போதுதான் எடுக்கப்படும் என்கிற முறை சரியாக இருக்காது என்பதை நான் இந்த நேரத்திலே கவனப்படுத்த விரும்புகிறேன்.

(ஆ) காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலை வெடி விபத்து—தொடர்ச்சி

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி விபத்து சம்பந்தமாக 16 ஆம் தேதி நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு